**புதுச்சேரி அரசு**
**வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை**
**கூடுதல் வேளாண் இயக்குனர் (தோட்டக்கலை) அலுவலகம்**
**தாவரவியல் பூங்கா, புதுச்சேரி**

**செய்திக் குறிப்பு**

புதுச்சேரி,14.02.2020

புதுச்சேரி அரசு வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை, தோட்டக்கலை பிரிவில் **மாறுபட்ட வேளாண்மை மூலம் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின்** மூலமாக தோட்டக்கலை விவசாயிகளை ஊக்குவிக்கும் வண்ணம் பல்வேறு திட்டக் கூறுகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இவற்றின் ஓர் அங்கமாக தோட்டக்கலை சாகுபடியில் இயந்திரமயமாக்கலை அதிகரிக்கும் பொருட்டு புதுச்சேரி பகுதியைச் சார்ந்த தோட்டக்கலை விவசாயிகளுக்கு ராக்கர் தெளிப்பான் (Rocker Sprayer), மின் விசை கைத்தெளிப்பான் (Battery Hand Sprayer), விசைத் தெளிப்பான் (Power Sprayer), விசைக் களை எடுக்கும் கருவி (Power Weeder) ஆகியவற்றை மாநிலத்திட்டத்தின் மூலமாக மானிய விலையில் வழங்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை தாவரவியல் பூங்காவில் இயங்கும் கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை) அலுவலகத்தில் உள்ள வேளாண் அலுவலர் (காய்கறி) அவர்களிடம் பெற்றோ அல்லது வேளாண் துறையின் இணையதளம் (https://agri.py.gov.in) மூலமாகவோ பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த விண்ணப்பங்களை வரும் 25.02.2020 தேதிக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(மு. வேதாசலம்)
**கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை)**